**செ. கு. எண்: 183** **நாள் : 23.09.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**
அவர்களின் அறிக்கை – 23.9.2014

கடந்த நான்கு மாதங்களாக பக்ரைன் நாட்டில் உள்ள தனியாருக்குச் சொந்தமான மீன்பிடி நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியிலிருந்த ராமநாதபுரம் மாவட்டம், திருப்பாலைக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கராசு என்பவரின் மகன் திரு. கார்த்திகேயன் 21.9.2014 அன்று இந்தியாவைச் சேர்ந்த மூன்று மீனவர்களுடன் பக்ரைன்-கத்தார் நாட்டின் கடல் எல்லைப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது கத்தார் நாட்டு கடலோர காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் ஆழ்ந்த துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த மீனவர் திரு. கார்த்திகேயன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மீனவர் திரு. கார்த்திகேயன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**